செ.வெ.எண்: 14 நாள்:08.10.2016

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி புதுக்கோட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் அம்மா இருசக்கர வாகன பழுதுநீக்குதல் மற்றும் பராமரிப்பு பயிற்சி மற்றும் Basic Fitting, Turning, Milling, Basic AutomotiveServicing4 Wheeler, Electrician Domestic, Arc&Gas welder, CO2-Welder முதலான பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் வாயிலாக இளைஞர்களுக்கு, குறுகிய கால தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. புதுக்கோட்டை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பகுதி நேர பயிற்சி மாலை 5 மணி முதல் 8 மணி வரை நடைபெறும். இப்பயிற்சி முழுக்க முழுக்க இலவசமாக அளிக்கப்படும். போக்குவரத்துப்படியாக நாள் ஒன்றுக்கு ரூ.100/-வீதம் மாதாந்திர உதவித்தொகையாக ரூ.3000/- வரை வழங்கப்படும், பயிற்சியின் முடிவில் தேர்வுநடத்தி TNSDC மூலம் பயிற்சியினை நிறைவு செய்யும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கியும் வேலைவாய்ப்பும் ஏற்படுத்திதரப்படும்.

இப்பயிற்சியில் சேர குறைந்தபட்சம் 8-ம்வகுப்பு மற்றும் 10-ம்வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு 18 முதல் 45-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் தங்களது அசல் கல்விச் சான்று, சாதிச்சான்று, ஆதார்அட்டை, இருப்பிடமுகவரிக்கான சான்றாக குடும்பஅடையாள அட்டையின் அசல் மற்றும் சமீபத்தில் எடுக்கப்பட்ட 3 புகைப்படங்கள் (Passport Size) கொண்டு வரவேண்டும். மேலும், இத்தொழிற்பயிற்சியில் சேர இச்சான்றுகளின் 2 நகல்களுடன், இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் விண்ணப்பத்தினையும் பூர்த்தி செய்து அளிக்க வேண்டும். குறுகிய கால தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 13.10.2016 அன்றிலிருந்து நேரில் வந்து விண்ணப்பித்து பயிற்சியில் சேர்ந்துகொள்ளலாம் .

மேலும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் புதுக்கோட்டை தொலைப்பேசிஎண் 04322-221584.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**